**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 26–ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 –ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 171/2022</u>**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 271/2025</u>**

**<u>CN0R.NO. TNKR11- 001502-2022</u>**

**தமிழக அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
**லாலாப்பேட்டை காவல் நிலையம்,**
**குற்ற எண்.164/2021**
**சட்டபிரிவு** : 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT --- **புகார்தாரர்**

// **எதிர்**//

**கௌதம் (எ) கௌதமன், வயது 21,**
**த/பெ. லட்சுமணன்,**
**அரிஜன தெரு, பிள்ளாப்பாளையம்,**
**கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,**
**கரூர் மாவட்டம்.** --- **குற்றம்சாட்டப்பட்டவர்**

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 09.04.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC 271/2025,<br>CNR No.TNKR11-001502-2022 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Lalapettai P.S.<br>/Vs/<br>**கௌதம் (எ) கௌதமன்** |
| 6. | Date of Occurrence | 27.04.2021 |
| 7. | Date of Complaint | 04.05.2021 |
| 8. | Date of Arrest if any and Remand | Anticipatory Bail |
| 9. | Period of remand of the accused | - |
| 10. | Date of Release on bail | Anticipatory Bail |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | Date of Final report | 08.05.2021 | | |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil | | |
| 13. | Date of questioning of the accused U/s. 240 of Code of Criminal Procedure | 11.09.2025 | | |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness | Chief | Cross |
| | | PW-1<br>PW-2 | 17.03.2026<br>18.03.2026 | -<br>18.03.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil | | |
| 16. | Date of examination of the accused U/s. 313 of the Code | 30.03.2026 | | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil | | |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil | | |
| 19. | Date of Commencement of Trial | 17.03.2026 | | |
| 20. | Date of closure of Trial | 18.03.2026 | | |
| 21. | Date of Sentence or order | 09.04.2026 | | |
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil | | |
| 23. | If any delay, give explanation | No | | |

இவ்வழக்கானது கடந்த 20.12.2022 ஆம் நாள் நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 30.03.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சதிஷ்குமார்., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று

09.04.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும், தீர்ப்புரை

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர், லாலாபேட்டை கா. நி. கு. எண். 164/2021 |
| எதிரியின் பெயர் | கௌதம் (எ) கௌதமன், வயது 21,<br>த/பெ. லட்சுமணன்,<br>அரிஜன தெரு, பிள்ளாப்பாளையம்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT |
| எதிரியின் பதில் | குற்றவாளிகள் அல்ல |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளிகள் அல்ல |
| அரசு குற்ற வழக்கறிஞர் | திருமதி.S.பெரியமறத்தி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.D.சதிஷ்குமார் |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 30.03.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 09.04.2026 |

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது லாலாபேட்டை காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173–இன் கீழ் 04.05.2021 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ன் கீழான குற்றத்திற்காக குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 171/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் 2021ம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்டதால் காவல்நிலைய எல்லை நிலவரையரை அடிப்படையில் மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதிமன்ற ROC.No. 19/2024/A1, 30.09.2025 என்ற உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்ற சி.சி.எண். 271/2025 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்ட

வழக்காகும்.

**<u>இறுதியறிக்கையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் சாட்சி 1 ராஜகாந்தாவின் மகளான சாட்சி5 நிஷாவிடம் புகார்தாரர் தெருவை சேர்ந்த எதிரி கௌதமன் (எ) கௌதம் அடிக்கடி கேலி கிண்டல் செய்து வந்துள்ளார் அதை புகார்தாரரும் அவரது கணவரான சாட்சி –2 வையாபுரியும் எதிரி கௌதம் பெற்றோரிடம் உங்க மகன் கௌதம் எங்க மகள் நிஷாவை தொந்தரவு செய்து வருகிறான் என்றும் அவனை கண்டித்து வையுங்கள் என்றும் சொல்லிவிட்டு வந்த பிறகும் எதிரி கௌதம் தொடர்ந்து புகார்தாரர் மகள் நிஷாவை தொந்தரவு செய்து வந்துள்ளார். புகார்தாரர் ராஜகாந்தாவும் அவரது கணவர் வையாபுரியும் எதிரி கௌதமியிடம் நேரில் பார்த்து நிஷாவிடம் ஏண்டா தவறா நடக்குற ஒழுங்கு மரியாதையா இருடான்னு கண்டித்துள்ளனர். அதனால் விரோதம் கொண்ட எதிரி கௌதம் 28.04.2021 ம் தேதி நள்ளிரவு சவுக்கு தடியுன் புகார்தாரர் வீட்டிற்கு சென்று புகார்தாரரை வெளியே வாங்கடி தேவுடிய புண்டா மவளுகளே என பொது இடத்தில் அறுவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டவும் புகார்தாரர் ராஜகாந்தா எதிரி கௌதமிடம் ஏண்டா இப்படி அக்கிரமம் செய்ற மரியாதையா போடா என்று சொன்னதற்கு எதிரி கௌதம் என்னடி சட்டம் பேசுறேன்னு சொல்லி கையில் வைத்திருந்த தடியால் புகார்தாரரின் நெற்றி, வலது கை மணிக்கட்டு ஆகிய இடத்தில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் புகார்தாரர் ராஜகாந்தாவை பெண் என்றும் பாராமல் காலால் அடிவயிற்றில் எட்டி உதைத்து கீழே தள்ளியும் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி என்றைக்காக இருந்தாலும் உங்களை கொல்லாமல் விட மாட்டேன் என்றும் புகார்தாரர் மகள் நிஷாவை கெடுத்து நாசம் பண்ணாமல் விட மாட்டேன் என்றும் மிரட்டியுள்ளார். எனவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT ன் படி தண்டிக்கப்பட வேண்டியவராகிறார் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) லாலாப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரிகளின் மீது கு.வி.மு.ச. பிரிவு 190(1)ன் படி வழக்கை கருத்தில் கொண்டு குற்ற சட்டப்பிரிவு U/s. 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT –ன் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

**3)** எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரியிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவு U/s. 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT - ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**4)** இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 முதல் 10 குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 3 முதல் 9 சாட்சிகள் விசாரிக்காமல் Dispence செய்யப்பட்டுள்ளார்கள். எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**5) <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து வெளிபடும் வழக்கு சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு:</u>**

அ.சா.1. ராஜகாந்தா புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர். ஆஜர் எதிரி அ.சா.1ன் மருமகன். அ.சா.1ன் கணவர் 5 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு 12.30 மணியளவில் அ.சா.1 வீட்டில் இருந்தபோது யாரோ ஒருவர் அ.சா.1ன் கையில் அடித்துவிட்டார். அ.சா.1 ஐ அடித்தவர் யார் என்று இருட்டாக இருந்ததால் தெரியவில்லை. அ.சா.1 குளித்தலை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்தபோது போலிசார் அ.சா.1யிடம் வெள்ளைத்தாளில் கையெழுத்து பெற்றார்கள். தற்போது அ.சா.1யிடம் புகாரில் உள்ள கையெழுத்து அ.சா.1 உடையது தான். புகார் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது போலிசார் என்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

**5.1)** அ.சா.2 திருமதி. லட்சுமி உதவி ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். உதவி ஆய்வாளர் உதயகுமார் 04.05.2021 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜகாந்தா என்பவர் கொடுத்த புகாரை பெற்ற நிலைய மனு எண்.180/2021 வழங்கியும், புகார் வாக்குமூலம் பெற்று பிறகு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.164/2021 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

**5.2)** பின்னிட்டு அன்றைய தேதியிலேயே சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்தனவேல், காந்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். சாட்சிகள் ராஜகாந்தா, வையாபுரி, சக்திவேல், தெய்வானை, நிஷா, சந்தனவேல், காந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அ.சா.1 ராஜகாந்தா என்பவருக்கு சிகிச்சை அளித்த குளித்தலை அரசு மருத்துவர் பாரதிகார்த்திகா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

**6)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) மற்றும் 351(1)(ஆ) இன் படி 30.03.2026 ஆம் தேதி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும், கூறினார்.

**7)** இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரியின் மீது** 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW ACT **சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

<u>**8) தீர்வு.**</u>

<u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**</u>

இவ்வழக்கின் புகார்தாரர் சாட்சி 1 ராஜகாந்தாவின் மகளான சாட்சி5 நிஷாவிடம் புகார்தாரர் தெருவை சேர்ந்த எதிரி கௌதமன் (எ) கௌதம் அடிக்கடி கேலி கிண்டல் செய்து வந்துள்ளார் அதை புகார்தாரரும் அவரது கணவரான சாட்சி -2 வையாபுரியும் எதிரி கௌதம் பெற்றோரிடம் உங்க மகன் கௌதம் எங்க மகள் நிஷாவை தொந்தரவு செய்து வருகிறான் என்றும் அவனை கண்டித்து வையுங்கள் என்றும் சொல்லிவிட்டு வந்த பிறகும் எதிரி கௌதம் தொடர்ந்து புகார்தாரர் மகள் நிஷாவை தொந்தரவு செய்து வந்துள்ளார். புகார்தாரர் ராஜகாந்தாவும் அவரது கணவர் வையாபுரியும் எதிரி கௌதமியிடம் நேரில் பார்த்து நிஷாவிடம் ஏண்டா தவறா நடக்குற ஒழுங்கு மரியாதையா இருடான்னு

கண்டித்துள்ளனர். அதனால் விரோதம் கொண்ட எதிரி கௌதம் 28.04.2021 ம் தேதி நள்ளிரவு சவுக்கு தடியுன் புகார்தாரர் வீட்டிற்கு சென்று புகார்தாரரை வெளியே வாங்கடி தேவுடிய புண்டா மவளுகளே என பொது இடத்தில் அறுவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டவும் புகார்தாரர் ராஜகாந்தா எதிரி கௌதமிடம் ஏண்டா இப்படி அக்கிரமம் செய்ற மரியாதையா போடா என்று சொன்னதற்கு எதிரி கௌதம் என்னடி சட்டம் பேசுறேன்னு சொல்லி கையில் வைத்திருந்த தடியால் புகார்தாரரின் நெற்றி, வலது கை மணிக்கட்டு ஆகிய இடத்தில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் புகார்தாரர் ராஜகாந்தாவை பெண் என்றும் பாராமல் காலால் அடிவயிற்றில் எட்டி உதைத்து கீழே தள்ளியும் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி என்றைக்காக இருந்தாலும் உங்களை கொல்லாமல் விட மாட்டேன் என்றும் புகார்தாரர் மகள் நிஷாவை கெடுத்து நாசம் பண்ணாமல் விட மாட்டேன் என்றும் மிரட்டியுள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**9)** இந்த வழக்கில் காயம்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி அ.சா.1ன் மருமகன் என்றும், அ.சா.1ன் கணவர் 5 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு 12.30 மணியளவில் அ.சா.1 வீட்டில் இருந்தபோது யாரோ ஒருவர் அ.சா.1ன் கையில் அடித்துவிட்டார் என்றும், அ.சா.1 ஐ அடித்தவர் யார் என்று இருட்டாக இருந்ததால் தெரியவில்லை என்றும், அ.சா.1 குளித்தலை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்தபோது போலிசார் அ.சா.1யிடம் வெள்ளைத்தாளில் கையெழுத்து பெற்றார்கள் என்றும், தற்போது அ.சா.1யிடம் புகாரில் உள்ள கையெழுத்து அ.சா.1 உடையது தான் என்றும், புகாரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

**10)** அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி தனது உறவினர் என்றும், எதிரி தான் பொது இடத்தில் அறுவறுக்க தக்க வார்த்தைகளால் திட்டினார் என்றும், தடியால் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அ.சா.1 ஐ கொடுமைப்படுத்தி தொந்தரவு செய்தததாக சாட்சியம் அளிக்கவில்லை. அதனால், அரசு தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு உள்ளாகிறது.

**11)** புகார் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 மற்றும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 ஐ எதிரி திட்டி, காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து, அடித்ததாக சாட்சியம் அளிக்காததால் புகாரில் உள்ள கையெழுத்து அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவுவதாக இல்லை.

**12)** அ.சா.1 ராஜகாந்தா அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியிடம் நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பொழுதும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**13)** அ.சா.2 திருமதி.லட்சுமி உதவி ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தில், காவல் உதவி ஆய்வாளர் உதயகுமார் அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு, காயச்சான்றிதழ் பெற்று இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 03.04.2020 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 04.05.2020 அன்று நீதிபதியால் பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இதன் மூலம் அ.சா.1 யிடம் பெற்ற புகார் வாக்குமூலத்திற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது. காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் கூறவில்லை இது முதல் தகவல் அறிக்கையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**15)** அ.சா.ஆ.4 பார்வை மகசர் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது சம்பவயிடமானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 02.00 கி.மீ வடக்கில் அமைந்துள்ளது. சம்பவ இடமானது பிள்ளாபாளையம் – வல்லம் செல்லும் தார் ரோட்டில் பகவதி அம்மன் கோவில் அருகே உள்ள வாதி ராஜகாந்தா வீட்டின் முன்பு நடந்ததாக எழுதப்பட்டு சாட்சிகள் கையொப்பமிட்டுள்ளார்கள். அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் மேற்படி ஆவணத்தை

உற்றுநோக்கும்போது வல்லம் செல்லும் தார் ரோடு – பிள்ளாப்பாளையம் செல்லும் ரோடு அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆவணங்கள் மூலம் சம்பவயிடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளர் என்பது தெரிய வருகிறது.

**16)** அ.சா.ஆ.6 குளித்தலை அரசு மருத்துவமனையில் வழங்கிய ராஜகாந்தா என்பவரின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது மேற்படி ஆவணத்தில் 28.04.2021 ம் தேதி காலை 07.00 மணிக்கு அடையாளம் தெரிந்த ஒரு நபர் குச்சியை வைத்து அடித்து காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 பிறழ் சாட்சியாகியுள்ளதால் மேற்படி, ஆவணங்கள் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

**17)** இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 பிறழ் சாட்சியாகி அரசு தரப்பு சாட்சிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது. அதனால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW Act ன் படி வனையப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், எதிரி விடுதலை பெற தக்கவர் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18)** இறுதியில், எதிரிக்கெதிரான இதச பிரிவு 294(b), 324, 506(ii), 509, 4 TNPHW Act –ன் கீழான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து குவிமுச பிரிவு 248 (1) மற்றும் 271(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரியிடம் பிணைமுறி வாங்கவில்லை. அரசு தரப்பின் வழக்கு சொத்து விவரம் தாக்கல் இல்லை அதனால் சொத்து பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 –ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.10 01:02:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**பின் இணைப்பு**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | ராஜகாந்தா (புகார்தாரர்) |
| அ.சா.2 | திருமதி.லட்சுமி (புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் |

**எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:–இல்லை**

**எதிரி தரப்பில் சான்று பொருட்கள் :– இல்லை**

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:– இல்லை**

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.10 01:02:58 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின்சேர்க்கை:</u>**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
3. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்:</u>**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.